**செய்தி வெளியீடு எண் : 1145** **நாள் : 10.07.2022**

## செய்தி வெளியீடு

2022–2023 ஆம் கல்வியாண்டிற்கு இளங்கலை பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற தகுதிவாய்ந்த மாணாக்கர்கள் அரசு/அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரி மற்றும் கலைக் கல்லூரிகள் / அண்ணா பல்கலைக் கழகம் / துறைகள் (University Departments) / வட்டார மையங்கள் (Regional Centers) / அண்ணாமலை பல்கலைக்கழகம் / சென்னை பல்கலைக் கழகம் / இதர பல்கலைக் கழகங்கள் / சுயநிதி பொறியியற் கல்லூரிகள் மற்றும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை 600 025 மற்றும் கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை 600 006 அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் எம்.பி.ஏ./எம்.சி.ஏ. முதுநிலை பட்டப்படிப்பு (MBA/MCA) சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இணையதளம் மூலமாக விண்ணப்பிக்க தேவையான நெறிமுறைகள் :

1) **விண்ணப்பிக்கும் முறை** : www.gct.ac.in / www.tn–mbamca.com என்ற இணையதளங்கள் வாயிலாக தேவையான சான்றுகளுடன் இணையதளம் மூலமாக மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும்.
2) விண்ணப்பதாரர்கள் எம்.பி.ஏ. மற்றும் எம்.சி.ஏ. முதுநிலை பட்டப்படிப்புகளுக்கு தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.
   இணையதளம் மூலமாக விண்ணப்பங்கள் பதிவு செய்யும் நாள்
   துவங்கும் நாள் : 11.07.2022 முடிவுறும் நாள் : 05.08.2022
3) **பதிவுக் கட்டணம்** : பதிவுக் கட்டணத்தை விண்ணப்பதாரர் Debit Card/Credit Card / Net Banking இணையதளம் வாயிலாக மட்டுமே செலுத்தலாம்.
4) இந்த கல்வியாண்டில் எம்.பி.ஏ/எம்.சி.ஏ. முதுநிலை பட்டப்படிப்பு கலந்தாய்வு நடைமுறைகளான விண்ணப்பப் பதிவு, சான்றிதழ் பதிவேற்றம், சான்றிதழ் சரிபார்ப்பு, கல்லூரி தேர்ந்தெடுத்தல், தற்காலிக மற்றும் இடைக்கால ஒதுக்கீட்டு ஆணை ஆகியவை அனைத்தும் இணையதளம் வாயிலாக மட்டுமே நடைபெறும்.
5) மேலும் விவரங்கள் அறிய www.gct.ac.in / www.tn–mbamca.com இணையதள முகவரியில் "INFORMATION AND INSTRUCTIONS TO CANDIDATES" பக்கத்தில் பார்க்கவும்.
   தொடர்பு எண்.0422/2451100

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in